நிறைவேற்றி குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்புவாரானால் முறைப்படி அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–20)

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, சாக்கடை என்பது நகரத்திற்கு அருகாமையிலுள்ள ஆறுகளில் கலந்து தண்ணீர் வீணாவதைத் தடுக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவரவர்களே, இது போன்ற ஏதேனும் குறிப்பிட்ட புகார்கள்—அதாவது ஆற்றில் கலப்பதாக—இருக்குமென்று சொன்னால் அந்த இடத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளிக்கின்றபோது மக்கள் தொகை அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். கடலூரைப் பொறுத்தவரை அங்கு சுமார் 2 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கணக்கில் இருப்பதனால் அந்த நகரத்தில் பாதாளச் சாக்கடை அமைக்கின்ற திட்டம் குறித்து முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவரவர்களே, முன்பு மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் கேட்ட கேள்விக்கான பதிலிலேயே இதற்கான பதிலும் அடங்கி இருக்கிறது.

குளச்சல் தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

241— (*வினா எண். 302) திரு. ஆ. பாலையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதியில் மேல கொடுப்பக்குழி, ஆலன்விளை, குழிவிளை, செருப்பன்கோடு, அரசர்கோணம், மேல கட்டி மாங்கோடு, கீழ கட்டிமாங்கோடு ஆகிய ஊர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1989 மே 11]

மாண்புமிகு, டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இல்லை.

விவசாயிகளின் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கோரி வரப்பெற்றுள்ள மனுக்கள்.

242—(* வினா எண். 6) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள விவசாயிகளிடமிருந்து கிணறுகளுக்கு மின் இணைப்பு கோரி 1980 டிசம்பர் முதல் 1988 டிசம்பர் முடிய வரப்பெற்றுள்ள மனுக்கள் எத்தனை ?

(ஆ) அவற்றில் எத்தனை கிணறுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) சுமார் 6,00,000 மனுக்கள் பெறப்பட்டன.

(ஆ) அவற்றுள் 3,05,000 விவசாய விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்களுடைய பதிலிலே கடந்த 8 ஆண்டுகளில் 3 லட்சத்து 5 ஆயிரம் விவசாய விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு தந்து இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இன்றையதினம் அனுமதி கிடைத்து, மோட்டார்கள் வாங்கி வைத்து 6 மாதங்களுக்கு மேலாக பல நூற்றுக்கணக்கான விவசாயிகள் என்னுடைய தொகுதியிலே இன்றைக்கும் மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கிறார்களே, அதை எல்லாம் கொடுத்ததாகக் கணக்கிட்டு சொல்கிறார்களா அல்லது கொடுக்காத 3 லட்சம் மனுக்களில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மின் இணைப்பு வழங்கப்பட்டதை மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கூறப்படுகிறதே தவிர நோட்டீஸ் கொடுத்து மோட்டார்கள் வாங்கப்பட்டு வைத்ததை எல்லாம் கணக்கில் சேர்க்கப்படவில்லை.